**தேதி:-15-11-2019 SESSIONS CASE NO.208/2017**

**P.W-1 (சுந்தரபாண்டியன்)**

**குறுக்கு விசாரணை:-**

நான் கிராம நிருவாக அலுவலராக பணியேற்று 10 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது. அச்சம்பத்து கிராம நிருவாக அலுவலகத்தில் இருந்து சம்பவ இடம் சுமார் 4 கி.மீ தூரத்தில் இருக்கும். சம்பவ இடத்திற்கு போவதற்கு வாகன வசதி உள்ளதா என்றால் இருசக்கரவாகனத்தில் சென்று கொஞ்சதூரம் நடந்து போக வேண்டும். நடந்து போகும் தூரம் சுமார் 100 மீட்டர் இருக்கும். வரப்பு, வாய்க்கால் கடந்து செல்ல வேண்டும்.அதனால் 10 நிமிடம் ஆகும். இருசக்கரவாகனத்தை நிறுத்திய இடத்தில் இருந்து தென்திசையை நோக்கி சென்றோம். இரவு நேரம் என்பதால் இருட்டாக இருந்ததா என்றால் இருட்டாகும் சூழ்நிலை இருந்தது. அ.சா.ஆ.1 புகாரை காவல்நிலையத்தில் வைத்து எழுதினேன். புகார் கொடுப்பதற்கு முன்பாக ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்திலும், சம்பவ இடத்திலும்வைத்து பலமுறை ஆய்வாளர் விசாரித்தார். புகார் கொடுத்த அன்று இரவு 8.30 மணியளவில் ஆய்வாளர்என்னை விசாரித்தார். மறுநாள் மாலை 5 மணியளவிலும்விசாரித்தார்.குற்றவாளியை கைது செய்யும் போது விசாரித்தார். ஆய்வாளர் பெயர் தெரியாது. அவர் நாகமலைபுதுக்கோட்டை காவல்நிலையத்தில் கூடுதல் பொறுப்பில் இருந்தார். நான் சொன்ன விபரங்களை ஆய்வாளர் எழுதிக் கொண்டாரா அல்லது காவலர் எழுதினாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் கொடுத்த புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் கல்யாணசுந்தரத்தின் மகன்கள் சரவணன் மற்றும் ரமணன் ஆகியோர் என் அலுவலகத்திற்கு வந்து தங்களது தோட்டத்தில் அடையாளம் தெரியாத சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஆண்பிணம் கிடப்பதாக தகவல் கூறினார்கள் என்ற விபரத்தை சொல்லியுள்ளேன். ரமணன் மற்றும் சரவணன் என் அலுவலகத்திற்கு வரும்போது மாலை 6.30 மணி இருக்கும். நான் சம்பவ இடத்திற்கும் போகும் போது இரவு சுமார் 07.15 மணி இருக்கும். மீண்டும் காவல்நிலையம் வரும் போது இரவு 8 மணி இருக்கும். போலிஸ் விசாரணையில் இறந்தவரின் ஓட்டுநர் உரிமத்தில் காணப்பட்ட முகவரியில் இருந்து சடலத்தினை உறவினர்கள் அடையாளம் காட்ட வரவழைக்கப்படுவதாக கூறி வரவழைத்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. ஓட்டுநர் உரிமத்தை பார்த்து உறவினர்களை வரவழைக்கும் போது இரவு சுமார் 9.30 மணியிருக்கும்.

சம்பவஇடத்தில் வைத்துத்தான் ஆய்வாளர் அப்படிச் சொன்னார். 26.09.2014 ல் நான் ஆய்வாளருடன் எத்தனை மணி வரையில் இருந்தேன் என்றால் நள்ளிரவு ஆகிவிட்டது. நேரம் தெரியவில்லை. பிரேதம் இரவு 9 முதல் 9.30 மணிக்குள் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. 26.09.2014 அன்று விசாரணையை முடித்துவிட்டு நள்ளிரவு நேரத்தில் வீட்டிற்கு போனேன். நள்ளிரவு நேரத்தில்தான் ஆய்வாளரை விட்டு நான் பிரிந்து சென்றேன். போலிஸ் விசாரணையில் அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கில் இறந்தவரின் சகோதரி இறந்தவரின் சடலத்தைப் பார்த்து தனது சகோதரர் என்று உறுதி செய்ததாக சொல்லியுள்ளேன். இறந்தவரின் சகோதரி எத்தனை மணிக்கு அரசு மருத்துவமனைக்கு வந்தார்என்றால் எனக்கு ஞாபகமில்லை. மறுநாள் 27.09.2014 அன்று மதியம் 2 மணியளவில் மேற்கண்ட சம்பவம் தொடர்பாக சிலநபர்களை விசாரிப்பதற்காக துவரிமான் நான்குவழிச்சாலை பேருந்துநிறுத்தத்திற்கு வரும்படி ஆய்வாளர் என்னிடம் கூறியதாக போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் எதிரிகள் நாங்கள் போய் பார்க்கும் போது காவல்ஆய்வாளரோடு இருந்தார்கள் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஆய்வாளரும், எதிரிகளும் நான்கு வழிச்சாலையில் பேருந்து நிறுத்தத்தில் எப்போதிருந்து நின்று கொண்டிருந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் 1 ஆம் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியதாக போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். கைப்பற்றிய கத்தியை கிணற்றின் அருகே இருந்த செடிப்புதரில்இருந்து எதிரிகள் மூவரும் தேடி எடுத்து ஆஜர் செய்ததாக போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். அந்தப்புதர் புல்செடி. அந்தப்புதர் கிணற்றிலிருந்து எந்த திசையில் இருந்தது என்றால் ஞாபகமில்லை. கிணற்றுக்கு நான்கு பக்கத்திலும் சுவர் இருந்ததா அல்லது சுவர் இல்லாமல் இருந்ததா என்றால் ஞாபகமில்லை. கிணறு அருகில் மோட்டார் ரூமிலிருந்து சற்று தொலைவில் இருந்த ஒரு கருங்கல்லை எதிரகள் மூவரும் அடையாளம் காட்டியதாக போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். மோட்டார் ரூமிலிருந்து கல் எந்த திசையில் எவ்வளவு தொலைவில் இருந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. கத்தி கிடந்த இடத்திற்கும், கல் கிடந்த இடத்திற்கும் இடையில் சுமார் 10 அடி இடைவெளி இருக்கும். பிரேதம் கிடந்த இடத்திற்கும், கத்தி மற்றும் கருங்கல் கிடந்த இடத்திற்கும் இடையில் சுமார் 10 அடி இடைவெளி இருக்கும். பிரேதத்தின் உடலில் பேண்ட்

மற்றும் டீசர்ட் இருந்தது. நிறம் ஞாபகமில்லை. முதல்தகவலறிக்கை நகலை நான் கையொப்பமிட்டு வாங்கினேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அவ்வாறு பெற்ற முதல்தகவலறிக்கையும் ஒரு கடிதத்தையும் நான் வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டுமென்றால் சரிதான். அவ்வாறு ஏதாவது அனுப்பினனா என்றால் கடிதம் அனுப்பினேன். நான் சொல்வது போல் சரவணன், ரமணன் எனக்கு எந்த தகவலும் கொடுக்கவில்லை என்றும், போலிசார் எதிரிகளை கைது செய்யவுமில்லைஎன்றும் 1 ஆம் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் போலிசாரும்எந்தப் பொருளும் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால்சரியல்ல. நிலையத்திலேயே போலிசார் தயாரித்து வைத்திருந்த ஆவணங்களில் கையொப்பம்மிட்டு விட்டு போலிசார் கேட்டுக கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 26.09.2014 அன்று இரவு 10 மணிவரையில் நான் என் அலுவலகத்தில் இல்லை என்றால் சரிதான். நான் என்அலுவலகத்திலேயே இல்லை என்றும், அதனால் ஆய்வாளருக்கு பகல் 2 மணியளவில் கிடைக்கப் பெற்ற தகவல் மறைக்கப்பட்டு அன்று இரவு 11 மணி அளவில் காவல்நிலையத்திற்கு எங்களை வரவழைத்து ஆய்வாளர் ஆலோசனையின்படி புகார் தயாரிக்கப்பட்டு, என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.